III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

O.S.48/2017

Deposition of witness for the Defendant/DW3
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 10-01-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : G.Seethalakshmi | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

முதலாம் பிரதிவாதி எனது அப்பாவின் உடன் பிறந்த சகோதரர். எனது அப்பாவிற்கும் அவரின் உடன் பிறந்த சகோதர சகோதரிக்கும் 2010 வாக்கில் பாகப்பிரிவு நடைபெற்றது. பாகபிரிவினைக்கு பிறகு எனது அப்பாவும் பெரியப்பாவும் தனித்தனி வீட்டில் வசித்து வந்தார்கள். கவிதா எனது அப்பாவின் உடன் பிறந்த சகோதரி. பிரமாண வாக்குமூலத்தில் எனது வயது 28 என்று குறிப்பிடப்பட்டுள்ளது, என்றால் அது சரிதான். முதல் பிரதிவாதி எப்போது commercial employee co-operative society ல் கடன் வாங்கினார் என்று தெரியாது. 2014 ல் அக்கடன் மீட்கப்பட்டது எனக்கு தெரியும். 2010 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தனக்கு கிடைத்த சொத்தை மேற்கூறிய சொசைட்டியில் அடமானம் வைத்து முதல் பிரதிவாதி கடன் வாங்கினார். எனது அத்தை கவிதா வாதியிடம் 19.04.2013 ல் ரூ.4,00,000/-, 25.06.2013 ல் ரூ.2,00,000/- கடன் வாங்கினார். நான் முதல் பிரதிவாதி வீட்டில் இருந்த போது அவர்கள் மேற்கூறிய அலுவல்கள் பற்றி பேசிய போது எனக்கு தெரியவந்தது. எனது பிறந்த தேதி 05.04.1997. மேற்கூறிய அலுவல்கள் ஏற்பட்ட போது நான் இளவராக இருந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்த வழக்குரை முதலாம் பிரதிவாதி செய்த எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்தேன். முதல் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் உள்ள விவரங்களை எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் எனக்கு தெரிந்தவற்றை கூறியுள்ளேன். எனக்கு வழக்கு விவரம் எதுவும் தெரியாது என்றும் பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்பதாகையால் அவர்கள் சார்பாக எனக்கு தெரியாத

விவரத்தை தெரிந்ததாக மாற்றி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு தெரியுமா என்றால் ஓரிரு முறை பார்த்துள்ளேன். முதல் பிரதிவாதி மேற்கூறிய சொசைட்டியில் கடன் பெற்ற போது அவரது சொத்தின் அசல் பத்திரத்தை வைப்பீடு செய்தார் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி வாதியிடமிருந்து கடன் பெற்று தான் வா.த.சா.3 கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியிடமிருந்து பெற்ற கடன் தொகையை வைத்து தான் முதல் பிரதிவாதி கோ–ஆப் ரேட்டிவ் சொசைட்டியில் பெற்ற கடனை மீட்டார் என்றும் தனது மகள் நர்மதாவின் திருமண செலவுகளை செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. 2010 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் எனது அத்தை கவிதாவிற்கும் ஒரு பாகம் வந்தது. அந்த அசல் பத்திரத்தையும் வாதியிடம் கொடுத்து தான் கவிதா கடன் பெற்றார் என்றால் சரிதான். எனக்கு வழக்கு விவரங்கள் நேரடியாக தெரியாத காரணத்தினால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதியுடன் முதல் பிரதிவாதியோ கவிதாவோ பேசியபோது நான் அவர்களுடன் இல்லை.